**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04ம் நாள் புதன்கிழமை**

**O.S. 97/2016**

வாதி தரப்பு சாட்சியாகிய PW1–ன் வாக்குமூலம் (1969 –ம் ஆண்டின் 44 –வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : உஷாராணி | தாலுக்கா | : திருவாரூர் |
| க/பெ | : பத்மநாபன் | கிராமம் | : திருவாரூர் டவுன் |
| ஜாதி | : | தொழில் | : வீட்டுக்குடித்தனம் |
| சமயம் | : | வயது | : 70/26 |

**(இவ்வழக்கில் கடந்த 19.01.2026 அன்று வாதியால் முதல் விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ. 1 முதல் 4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. தொடர்ந்து கூடுதல் ஆவணங்கள் குறியிடு செய்யவேண்டி வாய்த அளிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 04.02.2026 தேதியில் இ.ம.எண்.6/2026 ல் ஏற்பட்ட உத்தரவை அனுசரித்து வழக்குரை திருத்தம் செய்யப்பட்டது. இந்நிலையில் வாதிக்கு கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்ய அனுமதியளிக்கப்பட்டதை தொடர்ந்து கூடுதல் முதல் விசாரணை பதிவு செய்யப்படுகிறது. )**

**கூடுதல் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு கூடுதல் சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

கடந்த 24.09.1986 தேதிய ராங்கநாயகியம்மாள் எனக்கு எழுதிவைத்த பதிவு உயில் (ஆவண எண்.44/1986) அசல் **வா.சா.ஆ. 5,** ஆக குறியீடு செய்து தாவாப்படி தீர்ப்பாகவேண்டுகிறேன்.

*(வ.சா.ஆ. 5 ஆவணமான உயில் எழுதிவைக்க ரங்கநாயகியம்மாளுக்கு உரிமையில்லை என்ற வகையில் மேற்படி ஆவணம் செல்லதக்கதல்ல என பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி சங்கதி தீர்ப்புரையில் பரிசீலிக்கப்படும் என உத்தரவு பகரப்பட்டது).*

(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **வா.சா.ஆ. 5---** ஆவணம் மட்டும் குறியீடு செய்யப்பட்டது.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.03.04 18:29:44 +0530